# மாதர் மனோரஞ்சினி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"—ஔவையார்.

Vol. V. } Madras: March 1903. { No. 1.

புத்தகம் ரு. } சென்னபட்டணம் : 1903 மார்ச்சுமீ. { இல. க.


## * கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லை.

மைசூர் நாட்டைச்சார்ந்த ஒரு சிறு நகரத்தில் சௌதப்பன் என்கிற ஒரு பெரிய வர்த்தகன் வசித்துக்கொண்டிருந்தான். அவன் கண்ணியமுள்ளவன். சோம்பலற்ற உழைப்பாளி. வியாபாரத்திலோ மகா சாமார்த்தியமுடையவன். தனக்குரிய இவ்வித குணங்களினாலேயே திரண்ட திரவியத்திற்கு அதிபதியானான். தன்னிடத்தில் சதாபிரியமுள்ள அழகியலக்ஷ்மி தேவியை மணந்து களித்திருந்தான். கணவனும் மனைவியும் தெய்வ பக்தியில் சிறந்தவர்கள். ஒருவரை ஒருவர் கைவிடாது ஒத்து கண்ணியத்துடன் வாழ்ந்து வந்தார்கள். அளவில்லாத ஐசுவரியத்திற்கு அதிபதியாகி தன்னை உற்றார் சுற்றத்தார் மதிக்கும்படியான ஸ்தானமடைந்து எல்லாச்சுகம் பெற்றும் மக்களில்லாது வருந்தினான். தன் துர்பாக்கியத்தை நொந்து இது தெய்வ குற்றமோவென பயந்து கோவில்களிலெல்லாம் பூஜைகளும் அபிஷேகங்களும் செய்வித்தான். பிராமணர்களுக்கு சமாராதனை செய்வித்தான். இதுவுமன்றி சாஸ்திரவிர்ப்பன்னர்களுக்கு அநேக உயர்ந்த வெகுமதி யளித்தான். ஆனால் இவைகளினால் எவ்வளவும் பயன் உண்டாகவில்லை. தாங்கள் எண்ணியிருந்த எண்ணமெல்லாம் வீணாயிற்றேயென்று புருஷனும் பெண்சாதியும் மனம் நொந்தார்கள்.

இவ்வாறு வெகுநாள் கழிந்த பின்னர் தெய்வ கடாக்ஷத்தினால் சௌதப்பனுக்கு ஒரு அழகிய புத்திரன் பிறந்தான்.

சௌதப்பன் அளவிலாச் சந்தோஷம் அடைந்தான். அக்குழந்தைக்கு 'குமார்' என்று பெயரிட்டார்கள். அழகே இக்குழந்தையாய் உருக்கொண்டதோவென வியக்கும்படி குமார் நாளுக்கு நாள் விருத்தியடைந்து தன் பெற்றோர் மனதை களிப்பித்தான். ஆனால் சௌதப்பன் இச்சமதியற்ற சுகம் எந்நாளும் அனுபவிக்க கொடுத்து வைக்கவில்லை. திடீரென ஒருநாள் குமார் காணாமற்போக தன் தலையில் இடிவிழுந்தாற்போல் கலங்கினான். குமார் பெற்றோருக்கு ஒரே புதல்வனானதினால் வெகு அன்புடன் வளர்க்கப்பட்டு அநேக விலையுள்ள ஆபரணங்கள் அணிந்து வந்தான். அன்று காலையில் தான் நாடெங்கும் அலைந்து கண்கட்டி ஜாலவித்தை செய்யும் ஒரு கூட்டத்தார் சௌதப்பன் வீட்டெதிரில் தங்கள் ஜாலவித்தைகளைச் செய்தார்கள். அவர்கள் வித்தை முடிந்து சென்ற பின்னரே குமார் காணாமற் போனான். வித்தை செய்தவர்களாவது அல்லது வேடிக்கை பார்த்த ஜனங்களில் ஒருவராது குழந்தையை எடுத்துக்

* *Adapted from the Indian Ladies, Magazine.*

கொண்டு போயிருக்கலாம். உடனே ஊரெங்கும் ஆள்களனுப்பி தேடுவித்தான். டாணுக்காரர்களுக்கு வேண்டிய வெகுமதி அளிப்பதாகவும் வாக்களித்தான். இது விஷயமாய் அவன் செலவிட்ட பணம் எண்ணி முடியாது. ஆனால் எல்லாம் அவலமாயின. அவன் குலத்துக்கு திடீரென்று தோன்றின கதிரொளி என்றைக்கும் இருண்டது.

மேற் கூறிய சங்கதி நடந்து பன்னிரெண்டு வருஷங்கள் கடந்தன. சௌதப்பன் பிள்ளையிழந்த விசனத்தினாலே சம்பாதனையில் ஆசையை யொழித்து வர்த்தகத்தையும் கைவிட்டான். பெருமையும் பிரியமுள்ள பெண்சாதியைத் தவிரத் தனக்கு இவ்வுலகத்தில் வேறு சம்பந்தமில்லையென்று எல்லாவற்றையும் துறந்தான். இத்துலையாக்கஷ்ட காலங்களிலும் அவன் மனைவி ஒருநாளும் கடிந்து பேசாள். இதுவும் கடவுள் ஆணையென்று அதற்கு உட்பட்டாள். இதுவரையில் அவள் மனதிணங்க நடந்த அவள் புருஷன் இக்கஷ்டகாலங்களில் அவள் மனம் வருந்த நடக்கலாயினன். அவன் எவரையும் கடு கடுப்பான். அவனை களிப்பது கஷ்டம். லக்ஷ்மியோ இரவும் பகலும் பிள்ளையை நினைந்து நினைந்து அழுது தீராநோய்க்காளாகினள். தன் மனைவி நோயினால் வருந்துவதைக்கண்ட சௌதப்பன் இதுவரையில் தன்னால் மறக்கப்பட்டிருந்தபோதிலும் தன்னிடத்தில் ஆசைகுன்றாது நல்லொழுக்கத்துடனும் பொறுமையுடனும் நடந்துகொண்ட லக்ஷ்மிதேவியை தன்னிடமிருந்து சாவு பிரித்து விடுமோவென பயந்து மிகவும் துக்கித்தான்.

நாட்டு வைத்தியர்களையும் இங்கிலீஷ் வைத்தியர்களையும் அழைப்பித்தான். அவர்களெல்லோரும் அவன் மனைவி பிழையாள் என்று சொல்லிவிட்டார்கள்.

சௌதப்பனுடைய அயல் வீட்டார்களில் ஒருவனாகிய தாஸப்பனுக்கு பயிராகிகளுடன் அதிக பழக்கம். அவன் அவர்களை அழைத்து பிச்சையிடுவதுண்டு. அவர்கள் வார்த்தையிலும் மருந்திலும் அவனுக்கு அதிக நம்பிக்கை. அயலாரில் எவனாவது நோயினால் வருந்தினால் அவனுக்குச் சிநேகிதரும் பயிராகிகளில் ஒருவருமான கிஷோரிதாஸ் என்பவரிடம் போய் ஆலோசிப்பான். அவர் மந்திர தந்திரம் கற்று துர்தேவதைகளை யோட்டுவதில் மகா சாமார்த்திய முடையவரென்று பெயரெடுத்தவர். இவ்விடந்தான் தாஸப்பன் லக்ஷ்மி தேவியைக்குறித்து ஓடினான். கிஷோரிதாஸ் பரம தயாளுவானதினால் உடனே லக்ஷ்மிதேவியை வந்து பார்த்தார். அவர் அவள்கைதொட்டு நாடி பார்க்கவேயில்லை. அவர் சிலநேரம் தியானம்செய்பவர்போல் கண்ணை மூடிக் கொண்டிருந்து திடீரென மயக்கத்தினின்றும் விழித்தவர்போல் பின்வருமாறு கூறினர்.

ஓ காளியம்மையே! உன் ஆகாரம் கொடுக்கப்படாமற்போகாது. என்ன சொல்லுகின்றாய் என் தாயே! இந்த பாவி பிழைக்கவேண்டுமானால் அவ்வுயிர்க்கு பதில் உயிர் கொடுக்கவேண்டுமென்று கேழ்க்கின்றாயா? உன் உத்திரவின்படி அவ்விதமே சாவு கொடுக்கப்படும். இவ்வெளிய ஸ்திரீயின் பேரில் க்ஷாத்திரம வைக்காதே.” இம்மாதிரி சொல்லி முடிந்தவுடன் மறுபடியும் கண்ணை மூடிதன்னை மறந்தவன் போலிருந்தார். இவ்வாச்சரியத்தைக் கண்ணுற்றவர் அந்நோயாளியாகிய லக்ஷ்மி தேவியின் புருஷனும் தாஸப்பனுந்தான். மகா பக்தியுள்ளவும், பார்ப்பதற்குப் பயங்கரமுமான அத்தேவதை பயிராகியின் மூலமாய் தெரிவித்த அபராதத்தை அவ்விருவரும் கேட்க நடுங்கி தயங்கினார்கள். வேறொரு ஜீவனை சாவு கொடுக்காமற்போனால் லக்ஷ்மி பிழையாளென்று தெரிந்துகொண்டார்கள். சாவு கொடுப்

பது அவர்களுக்கு எவ்வளவு அறுவருப்பாயினும் லக்ஷ்மி தேவியின் உயிர்க்காக அவர்கள் துணியவேண்டியதாயிற்று.

கால தாமதமின்றி அக்கொடிய காளியை சாந்தபடுத்துவதற்கு வேண்டிய சாவையடைய விரும்பி சௌதப்பனும், பூசாரியும் வீடு விட்டு புறப்பட்டார்கள். சூரியனும் மறைந்தான். இராக்காலமோ இருண்டுதூரிக்கொண்டிருந்தது. அச்சிறு நகரத்தின் சஞ்சலமற்றிருக்கும் தெருக்களில் புயல் காற்று வீசியது. அன்றையதினம் அம்மாவாசையும் சேர்ந்தது. அத்தெருக்களில் லாந்தல்களினின்றும் உண்டாகும் மங்கிய வெளிச்சத்தைத் தவிர வேறொன்றும் கிடையாது. அந்நேரத்தில் தெருக்களில் நடப்பே கிடையாது. வெகுநேரம் அவர்கள் சந்துபொந்துகளெல்லாம் அலைந்து திரிந்தும் அவர்கள் தேடிய சாவு அகப்படவில்லை. சௌதப்பன் மனந்தளர்ந்தான். ஆனால் அவன் சிநேகிதனோ விடா முயர்ச்சியுள்ளவன். சௌதப்பன் தயங்குவதைக் கண்டு நீ ஒரு ஆண்பிள்ளையா? உன் மனைவியைக்காப்பாற்றும் பரிகாரம் உனது கையிலிருக்கையில் அவளை சாவுக்கிரையாக்குவது உனக்கு வெட்கமில்லையா வென்றான். இவ்வாறு சொல்லிச் சில நேரத்திற்குள் மங்கி மங்கி யெரிந்துகொண்டிருந்த தெரு லாந்தல் ஒளியினால் ஒரு கட்டை வண்டியின் கீழ் ஒரு மனித உருவம் படுத்திருப்பதைக்கண்டார்கள். இதோ பார் கடைசியில் நமக்கு நல்ல தருணம் வாய்த்தது என்று தாஸப்பன் சொல்லிக்கொண்டு குனிந்து தூங்கும் அம்மனிதன் முதுகில் தட்டினான். அம்மனிதன் திடுக்கிட்டு எழுந்து பயந்தவன்போல் தன்னைச்சுற்றிலும் பார்த்தான். அவன் முகம் லாந்தலின் வெளிச்சத்தில் திரும்ப இவர்களிருவரும் அவன் 12 அல்லது 13 வயதுள்ள வாலிபன் என்று தெரிந்துகொண்டார்கள்.

அவ்வெளிச்சம் அமாவாஸை இருளைப்போக்கப் போதாதாயினும் அவ்வாலிபனது முகத்தின்நற்குறியும் அழகும் அவர்களுக்குத் தெரியாமற் போகவில்லை. அவ்வாலிபனைப் பார்த்ததும் சௌதப்பன் மனது உருகியது. ஆனால் அவன் சிநேகிதன் தாஸப்பனோ கல்மனதுடையவன். தாஸப்பன் அச்சிறுவனை நோக்கி அடாபையா! நீயாவன்? என்று கேட்டான். நான் ஒரு ஏழைப்பையன். என் சுற்றத்தாரைத் தேடிவந்தேன். எனக்குத் தீங்கு செய்யாதேயுங்கள். நான் இன்று இரவு இவ்விடம் படுத்துக் கொள்ளும்படி விடுங்கள் என்று மிகவும் வணக்கத்துடன் மறுமொழி கூறினான்.

சி, சீ, நான் தீங்கு செய்வேனென்று உனக்கு என்னமாய்த் தெரியும். ஆனால் இக்குளிரில் நடுங்குவதைக் காட்டிலும் என்வீட்டில் நல்ல உணவு உண்டு அடக்கமான படுக்கையில் படுத்துத் தூங்க என்னுடன் வருவதற்கு உனக்குப் பிரியமில்லையாவென தாஸப்பன் அச்சிறுவனைக் கேட்டான். அதற்கவ்வாலிபன் ஐயா! தங்களுக்கு அநேக வந்தனம்; தங்கள் கட்டளைப்படி நடக்கக் காத்துக்கொண் டிருக்கிறேன் என்றான்; ஆனால் என்னுடன் வாவென்று தாஸப்பன் வழி நடத்தினான்.

அந்நகரவாசிகள் தாஸப்பன் நடத்தின வழியாய் நடப்பது அரிது. அக்குறுகலான சந்துவழி கிராமத்தின் எல்லைக்கப்புறம் கொண்டுபோய்விட்டது. தாங்கள் வீடுகளெல்லாம்தாண்டி தடல்களுக்கு வந்துவிட்டதாகத் தெரிந்துகொண்டார்கள். பையனுக்கோ மனதில் பயம் உண்டாயிற்று. சீக்கிரத்தில் வீடுபோய்ச்சேரலாமென்று எதிர்பார்த்திருந்த அச்சிறுவனுக்கு தன்னை திடீரெனக் காப்பாற்ற வந்தவர் அழைத்துச் செல்லும் இடம் அவனுக்கு தோன்றவில்லை. தான் தனிமையா யிருப்பதால் அவர்களைக் கேட்பதற்கும் பயம். அவர்கள் கொலைபாதர்களோ வென்றுகூட அவனுக்குச் சந்தேகம். இவர்கள் தனக்குக் கெடுதல் செய்வதற்குக் கூடதன் கைகால்களில் ஆபரணமும் நல்ல உடை

யும் இல்லாமலிருக்கும்பொழுது தன்னை இவ்விதம் அழைத்துச்செல்லும் அவர்கள் எண்ணம் என்னமோவென்று ஆச்சரியப்பட்டான். ஆ! என்மனம் சஞ்சலிக்கின்றது. ஆனாலும் யோசித்துப் பார்ப்போம் என்று தனக்குள் சொல்லிக்கொண்டான். இம்மூவரும் நகரத்தைவிட்டு வெகுதூரம் வந்துவிட்டார்கள். சுமார் 2, 3 மயில்தூரம் நடந்தும் இன்னும் இவ்விருவரும் கோரியவிடம் வரவில்லை. பையனும் தனக்குள் தைரியப் படுத்திக்கொண்டு சென்றான். வழி நடத்திவந்த தாஸப்பன் திடீரென நின்றான். அவனுக்கு எதிரில் சுமார் 10கஜம்தூரத்தில் பழையகாலத்து கல்விளக்கின் மங்கின வெளிச்சத்தில் தெரிந்தும் தெரியாமலுமிருந்த ஒரு கரடுமுரடான கட்டடத்தைக் கண்டான். அதனுள் பார்த்தவர் மனதைக் கலக்கும் கருத்த பயங்கரமான காளியின் உருவத்தையும்பார்த்தான். பையன் பலவிதமாகச் சந்தேகித்தான். மனது பதைபதைத்துத் துடித்தது. பேசுவதற்கோ நாவெழவில்லை; ஆனால் அவர்கள் அவன் கழுத்தில் பூமாலை போட்டவுடன் அவன் சந்தேகங்களெல்லாம் ஒழிந்தன. அவர்கள் தன்னை காளிக்கு நரபலியாக்கப் போகிறார்களென்று தெரிந்துகொண்டான்.

ஐய்யோ! என்னை சாப்பாற்றுங்கள் காப்பாற்றுங்கள். என்னை நீங்கள் இவ்விதம் கொல்லும்படி நான் என்ன குற்றங்கள் செய்தேன் என்று பரிதாபப் படும்படி ஏங்கி யழுதான்.

அட!முட்டாள் பையா! பேசினால் தெய்வகுற்றம் செய்தவனாவாய் காளியம்மனுக்கு இரையாகி அவள் பசியை தீர்ப்பதற்கு எல்லாருமே புண்ணியசாலிகளாக மாட்டார்கள். உன் நல்லகாலத்தைப்புகழ். பலியிடுவதை நிந்தித்தால் அது பலனற்றுப்போம் என்று தாஸப்பன் சொன்னான்.

அச்சிறுவன் கண்களினின்றும் தண்ணீர் ததும்பி கன்னங்களின் வழியாக தாரை தாரையாய் பெருகிற்றே யொழிய அவன் ஒரு வார்த்தையாவது சொல்லவில்லை. சௌ த்தப்பன் தயாளுவானதால் அப்பையனின் கஷ்ட நிலையைப்பார்க்க அவன் மனது உருகியது. முகத்தை கைகளினால் மூடிக்கொண்டு கண்ணீர்விட்டுத் தனக்குள் அழுதான். அவன் சிநேகிதனோ கல்நெஞ்ச முள்ளவன். சௌதப்பன் கைகளாலேயே அவ்வாலிபன் பலியிடப்பட வேண்டுமென்றான். சௌதப்பன் கண்களில் நீர்ததும்ப இச்சாவுகொடுப்பதைத் தாமதித்து செய்யலாமென்று வெகு நேரம் மன்றாடியும் அவன் சிநேகிதன் பிடிவாதத்தைக் கண்டு அவனே அக்காரியத்தை முடித்துவிடும்படி கேட்டுக்கொண்டான். அதற்கும் தாஸப்பன் சம்மதியாதது அறிந்து கை நடுநடுங்க பளபளப்பான கத்தியைப் பிடித்தான். அதைக் கண்டவுடன் இடிவீழ்ந்தாற்போல் அச்சிறுவன் மனங் கலங்கினான். அக்கத்தியின்முனை அவன் கழுத்திற்பட ஐயோ! என் தந்தையே! என் தாயே! நான் எப்பொழுது உங்களைக் காண்பேன் இனி ஒரு நாளும் காணப்போகிறதில்லை என கடைசியாகக் கதறி கீழே வீழ்ந்திறந்தான். அக்கொலையும் அறியாமல் செய்யப்பட்டது. அச்சவத்தையும் வெகு எளிதாய் தடல்களில் அடக்கஞ் செய்துவிட்டார்கள். சவத்தைப் புதைப்பதற்குமுன் தாஸப்பன் அவ்வாலிபனது கழுத்திலேதோ ஒரு தாழ்த்து தொங்குவதைக் கண்டு அதை தன் வசத்தில் வைத்துக் கொண்டான். சௌதப்பன் மிகவும் மனந்தளர்ந்தவனாய் சிநேகிதன் தன்பின்வர வீட்டை நோக்கிச் சென்றான்.

இவ்விருவரும் வீட்டிலில்லாதிருக்கும் சமயத்தில் ஒரு அற்புதம் உண்டாயிற்று, லக்ஷ்மி தேவி வியாதியினின்றும் தேறினாள். காளியம்மனின் வாக்கு ஒருபொழுதும் தவறுகிறதில்லையென்று நான் உனக்குச் சொல்லவில்லையா வென்று தாஸப்பன் ரகஸ்ய

மாய் சௌதப்பன் காதிற் சொன்னான். இராத்திரி 12 மணியாய் வெகு நேரமான படியால் சௌதப்பன் அன்று இராத்திரி நடந்த காரியங்களால் களைத்து படுக்கைக்குப் போயும் தூக்கம் பிடியாதது கண்டு தன் சிநேகிதன் தன்னிடம் கொடுத்த அந்த தாழ்த்தின் ஞாபகம் வர காலப்போக்காக அதில் என்ன விருக்கிறது என்று அதை எடுத்து அதன்மேல் வெள்ளித் தகட்டைப்பிரித்தான். அதனுள் ஒரு சிறு காகிதச்சுருளைக் கண்டு அதைப் பிரித்தவுடன் அச்சிறுவனது வயது இருப்பிடம் பெற்றோர்களின் பெயர் இவைகளெல்லாம் அக்காகிதத்தில் தெளிவாய் எழுதப்பட்டிருந்தது. அதை வாசித்தவுடன் அவன் மயங்கியதற்கு காரணமென்ன? ஐயோ பாவம்! தன் கைகளாலேயே தன் குழந்தையைக் கொலைசெய்துவிட்டதை யறிந்துகொண்டான். பின்னிட்டு இவர்கள் மிக விசனப்பட்டு துறவிகளாய் காசிக்குச் சென்று மரணமடைந்தார்கள்.

☞ கருத்து:— இக்கதையால் குழந்தைகளுக்கு நகைகளை யணிந்து தனிமையாக விடக்கூடாதென்றும், ஒவ்வொரு காரியத்தையும் ஆய்ந்து ஓய்ந்து செய்யவேண்டுமென்றும், பேய், பிசாசுகளை ஓட்டுகிறேன், இன்னும் வியாதிகளை சொஸ்தம் பண்ணுகிறேன் பலியிடவேண்டுமென்று சொல்லுகிற பூசாரிகளை நம்பக்கூடாதென்றும் ஸ்பஷ்டமாக விளங்குகின்றது. ப. ரீ.

# * குடும்ப ஆரோக்கியம்

* Contributed to the Indian Ladie's Magazine by Mrs. I. Brander.

## ஆகாயத்திற்கும் ஆரோக்கியத்திற்கும் உள்ள சம்பந்தம்.

நான் இப்போது எழுதுவதிலும் இனிமேல் எழுதப்போவதிலும் இதை வாசிப்பவர்கட்கு நன்றாகத் தெரிந்த விஷயங்கள் பல இருக்கலாம். ஆயினும் அவர்கள் என்னை மன்னிக்கவேண்டும். ஏனெனில் எல்லோருமே இவ்விஷயத்தைப்பற்றி அறிந்திருக்க முடியாது. அப்படித் தெரிந்தவர்களும் கூட நான் எழுதுவதனால் அவ்விஷயங்களை ஞாபகப்படுத்தப்பட்டுப் பயனடைவார்கள்.

சென்றமாதச் சஞ்சிகையில் நான இவ்விஷயத்தைப்பற்றி எழுதியபோது ஆரோக்கியத்திற்கு முக்கியமாக வேண்டியவற்றில் நல்ல ஆகாயம் ஒன்று என்று குறிப்பிட்டிருந்தேன். அது எவ்வாறு என்பதைப்பற்றி இப்போது ஆராய்வோமாக:—இரத்தாசயத்திலிருந்து (Heart) ஆர்டரிகளின் * (Arteries) வழியாய் தேகத்தின் ஒவ்வொரு மூலைக்கும் கொண்டுபோய் படுகிற இரத்தத்தினாலே மானிடதேகமானது வளர்க்கப்பட்டு வருகின்றது. இரத்தாசயத்திலிருந்து வெளிவரும் இரத்தம் மிகவும் பரிசுத்தமுள்ளது. இவ்விரத்தம் தேகத்தின் எல்லாப்பக்கங்களிலும் உலாவிக்கொண்டே தன்னிடத்திலிருக்கும் பிராணவாயுவைத் தசைகட்குக் கொடுத்து அதற்குப் பதிலாக அவைகளிடமிருந்து கெட்ட கரியமலவாயுவைத் தான் வாங்கிக்கொண்டு செல்வதனாலே தான் தசைகள் வளருகின்றன. இந்தக் கரியமல வாய்வு இரத்தத்தை அசுத்தம்செய்து விடுவதினாலே அவ்விரத்தம்தசைகட்கு மேலும் பயன்படக்கூடிய தன்மையைக்கெடுத்து விடுகிறது. ஆகையால் இவ்வசுத்த இரத்தமானது வெயின்கள் † (Veins) வழியாக

---

* இரத்தாசயத்திலிருந்து சுத்த இரத்தமானது தேகத்தின் எல்லாப் பாகங்களுக்கும் சிறு சிறு குழாய்களின் வழியாய்க் கொண்டுபோகப் படுகிறது. அப்படிச் சுத்த இரத்தத்தை கொண்டுபோகும் இரத்தக் குழாய்களுக்கு ஆர்டரிகள் என்றுபேர். இப்படிக் கொண்டுபோகப் பெற்ற இரத்தமானது அங்கங்கே தேகதாதுக்களில் உண்டான அசுத்தங்களை உட்கொள்வதால் அசுத்த இரத்தமாகிவிடுகின்றது. அதை மீட்டும் சுத்தமாக்கும்பொருட்டும் ஈரலுக்குக்கொண்டுபோகும் பொருட்டும் வேறு குழாய்கள் ஏற்பட்டிருக்கின்றன. இப்படி அசுத்த இரத்தத்தைக் கொண்டுவந்து சேர்க்கும் இரத்தக் குழாய்களுக்கு வெய்ன்கள் என்றுபேர்.

† ஆர்டரி என்பதன்கீழ் கொடுத்திருக்கும் குறிப்பைப் பார்க்க.

மீண்டும் இரத்தாசயத்தில் சேர்க்கப்படுகிறது. அங்கிருந்து அது ஈரலினுள்ளே (Lungs) செலுத்தப்படுகிறது. நாம் சதாசுவாசிக்கும் ஆகாயம் நமது ஈரலினுள் செல்லுகின்றது. இது சுத்த ஆகாயமாயிருந்தால்தான் இதில் அதிக பிராணவாய்வு இருக்கும். ஈரலினுள் செலுத்தப்பட்ட கெட்ட இரத்தமானது மேற்கூறிய ஆகாயத்தின் அருகாமையில் ஓடி அதிலிருக்கும் பிராணவாயுவைத் தானுட்கொண்டு தன்னிடமிருக்கும் கரியமலவாயுவை அதனிடம் செலுத்திவிடுகிறது. இதனால் இரத்தம் பரிசுத்தமாகி மீண்டும் தசைகட்கு உணவு கொடுக்கத்தக்கதாய் இரத்தாசயத்துட் செல்கின்றது. ஈரலில் இரத்தமானது கக்கிய கரியமலவாய்வு நாம் சுவாசம் விடுவதால் வெளிப்பட்டு ஆகாயத்தோடுகலக்கிறது.

ஆகையால் நாம் உட்கொள்ளும் சுவாசமாகிய 'உச்சுவாசத்திற்கும்' வெளியேவிடும் சுவாசமாகிய 'நிச்சுவாசத்திற்கும்' எவ்வளவு வித்தியாசமிருக்கிறதென்பதைப் பாருங்கள் நாம் உட்கொள்வது பெரும்பாலும் பிராணவாய்வுடன் கூடியதாகிய சுத்த ஆகாயம். நாம் வெளியே விடுவது கரியமலவாய்வும் ஆரோக்கியத்திற்குப் பொருந்தாத சில வஸ்துக்களும் நிறைந்த கெட்ட ஆகாயம்.

ஆகையால் நாம் நிச்சுவாசித்ததையே மீண்டும் எக்காரணத்தாலும் நாம் உச்சுவாசித்தல் கூடவே கூடாது அதை விஷமென்றே சொல்லலாம். அதை உட்கொண்டால் ஆரோக்கியத்தை இழந்துவிடுவோம். கொஞ்சம் அதிகமாகவே நாம் உட்கொள்வோமானல் நம்மை அது கொன்றாலும் கொன்றுவிடும். மானிட தேசத்தின் ஆரோக்கியம் முக்கியமாக இரத்தத்தின் பரிசுத்த நிலைமையைப் பொருத்ததாக இருக்கிறது. இரத்தத்தின் பரிசுத்த நிலைமை நாம் உட்கொள்ளும் ஆகாயத்தைப் பொருத்ததாக இருக்கிறது. நற்காற்றைச் சுவாசிப்போர் நன்றாகவளர்ந்து சுகதேகிகளாகவும் தெளிவான புத்தியுடையவர்களாகவும் ஊக்கமுடையவர்களாகவும் தம் வேலைகளைச் சரிவரச் செய்யத் தகுதியுடையவர்களாகவும் இருப்பார்கள். தாமே சுவாசித்த அல்லது மற்றப் பிராணிகள் சுவாசித்த நிச்சுவாசக் காற்றை வழக்கமாக உச்சுவாசம் புரிவோர்கள் வளர்வது அரிது. அப்படி வளர்ந்தாலும் மெலிவாயும் உடல் வெளுத்தும் உறுதியுமுற்சாகமு மற்றும் வேலைக்குதவாதவர்களாகவும் இருப்பார்கள்.

இவற்றையெல்லாம் உணர்ந்து உங்கள் குழந்தைகளையாவது அல்லது உங்கள் கீழ்வரும் வேறுயாவர்களையாவது வாயை மூடிக்கொண்டு தூங்கும்படி செய்யலாகாது. அவர்கள் அப்படிச் செய்வார்களேயானல் அவர்கள் தங்கள் நிச்சுவாசத்தையே மீண்டும் மீண்டும் உச்சுவாசிக்கவேண்டும். அப்படி அவ்வசுத்த ஆகாயத்தை உட்கொள்வதால் அவர்கள் உடலிலுள்ள கெட்ட இரத்தம் சுத்தம் ஆவதில்லை. அதன் காரணமாக அவர்கள் ஆரோக்கியமற்றவர்களாகவும் பலவீனர்களாகவும் தேககாந்தியற்றவர்களாகவும் ஆய்விடுவார்கள் என்பதற்கையமில்லை.

ஆகாயத்திலிருக்கும் பிராணவாயுவை மனிதர்கள் உட்கொள்வதுபோலவே எரியும் நெருப்புகளும் விளக்குகளும் உட்கொள்ளுகின்றன.

இவ்விரண்டிலும் ஒரேவிதமான காரியம்தான் உண்டாகின்றது. உயிராகிய நெருப்பை ஓங்கி எரியச் செய்வது பிராணவாய்வே என்பதும் அதைத் தழைத்தோங்காது அழிக்கச்செய்வது கரியமலவாய்வே என்பதும் முற்றும் உண்மையே. நம்மவர்களில் ஒவ்வொருவரும் ஒரு எரியும் நெருப்புக்குச் சமானமானவர்கள். அதுவே நம்முடம்பு வெப்பமாயிருப்பதற் குற்றகாரணம். ஒரு நெருப்பில் விரகும் கரியும் விளக்கில் எண்ணெயும் எப்படி எரிகின்றனவோ அப்படியே ஒவ்வொரு ஜீவஜெந்துவின் உடலில் ஒரு நெருப்பு எரிந்துகொண்டிருக்கிறது என்னலாம். இந்நெருப்புகளைப் பிராணவாய்வு பிரகாசிக்கச் செய்யும்; கரியமலவாய்வு அவித்துவிடும்.

எங்கெங்கே ஜீவப்பிராணிகள் சுவாசித்துக்கொண்டிருக்கின்றனவோ, எங்கெங்கே நெருப்பு அல்லது விளக்குகள் எரிந்துகொண்டிருக்கின்றனவோ அங்கங்கெல்லாம் ஆகாயத்திலுள்ள பிராணவாய்வு மிகக் குறைந்து வருகின்றதென்றும் அதிருந்த இடத்தில் கரியமல வாய்வு அதிகமாய் நிரம்புகிறதென்றும் இப்போது நாம் எளிதில் உணரக்கூடும். சுருங்கச்சொல்லில் அவ்விடங்களில் நல்ல காற்றோட்ட மில்லாவிட்டால் அங்குள்ள காற்றுமுழுமையும் விஷத்தன்மையை யுடையதாய்விடும்.

கெட்ட ஆகாயத்தை வெளியே அகற்றலும் நல்ல ஆகாயத்தை உள்ளே கொண்டு வருதலும்தான் காற்றோட்டம் என்பது. இதைச் சரிவரச் செய்வதற்கு நாம் இந்தச் சிறுவிதியைக் கவனிக்கவேண்டும். ஆகாயம் உஷ்ணமாகும்போது பரிமாணத்திற் பெருக்கின்றது. அப்போது அது கனமற்றதாகி மேலே கிளம்பும். ஆகாயம் குளிர்ச்சியடையும்போது அது குறுகி கனமுள்ளதாகி கீழேயே தங்குகின்றது.

நாம் வெளியே விடும் கரியமல வாய்வு உஷ்ணமாக இருப்பதனால் சாதாரணக் காற்றைவிடக் கனம்குறைந்து மேலே கிளம்புகின்றது. ஒரு அறையில் பெரிய ஜன்னல்களும் கதவுகளும் இருந்து அவைகள் திறந்து வைக்கப்பட்டால் கரியமல வாய்வாகிய கெட்ட ஆகாயம் கதவு ஜன்னல்கள் ஆகிய இவற்றின் மேற்பாகங்களின் வழியாக வெளிச்செல்லும். அப்போதே அவைகளின் கீழ்ப்பாகங்களின் வழியாக சுத்த ஆகாயம் உள்ளே நுழையும். காற்றோட்டமில்லாத ஒரு அறையில் அதிக ஜனங்களிருந்தால் அவ்வறையின் முகட்டினருகில் எப்போதும் கரியமலவாய்வு சேர்ந்துகொண்டே வரும். அப்போது நாம் முக்கியமாய்ச் செய்யவேண்டிய தென்னேயெனின் அக்கரியமலவாய்வு குளிர்ந்து கீழே இறங்காதபடி வெளியே அதைப் போக்கவேண்டியதுதான். அது அப்படி வெளிப்படுத்தப் படாவிட்டால் சீக்கிரத்தில் குளிர்ந்துவிடும். அப்படிக் குளிர்ந்த பின்னர் சாதாரணமாகக் காற்றைவிட அது கனமுள்ளதாகலின் தரையில் வந்து தங்கும். அப்போது ஜனங்கள் அதை மறுபடியும் உச்சுவாசிக்க வேண்டிவரும்.

சுவரில் கூரைக்குச் சமீபத்தில் சிறிய ஜன்னல்களையாவது அல்லது காற்றுப் போகும்படியான சிறு துவாரங்களையாவது அமைத்து அவைகளைத் திறந்து வைப்பது மிகவும் நலம். இந்தத் துவாரங்களின் வழியாக உஷ்ணம் பொருந்தி இலேசாக உள்ள கெட்டகாற்று வெளியே யகன்றுவிடும். அதேகாலத்தில் எப்போதும் நல்ல காற்று வருவதற்காக ஜன்னல்களும் கதவுகளும் திறந்துவைக்கப்பட வேண்டும்.

சாதாரணமாகப் படுக்கை யறைகளில் காற்றோட்டத்தைப்பற்றி அதிகமாகக் கவனிக்கிறதில்லை. இரவுகளில் குளிர்காற்று பனிமுதலிய வீசுங்கால் அவற்றை ஒருவாறு தடுப்பது அவசியமே. ஆயினும் காற்றோட்டம் சரியாக இருப்பதற்கு வேண்டிய ஏற்பாடு செய்தல் மிக அவசியம். படுக்கையறைச் சுவர்களில் மேற்கூறியவாறு சிறிய ஜன்னல்களும் காற்றுப்போகும் துவாரங்களும் அவசியம் இருக்கவேண்டும். அதனுட் படுப்பவர்கள் கட்டில் நாற்காலி முதலியவைமேலல்லாது தரையில் படுப்பவர்களானால் அத்துவாரங்கள் (அத்தியாவசியம் அப்படித் துவாரங்க ளில்லாவிட்டால்) என்ன ஆகுமென்பதை விவரிக்கின்றேன். உறங்குபவர்கள் கரியமலவாயுவை நிச்சுவாசிக்கின்றார்கள். இது உஷ்ணமாயிருப்பதால் உயரத்தில் போய்த்தங்குகின்றது. விடியற்காலம் 3 அல்லது 4 மணிக்கு அறை குளிர்ச்சியடையும்போது கரியமலவாய்வும் குளிர்ந்து கீழே இரங்கித் தரைக்கு அருகாமையில் நிற்கும். அப்போது உறங்குபவர்கள் அக்கரியமலவாயுவையே மீண்டும் உச்சுவாசிக்கின்றார்கள். ஆகையால் அவர்கள் காலையில் சுறுசுறுப்பில்லாமல் சோம்பலாயும் சில சமயங்களில் தலைவலியுடனும் எழுகின்றார்கள். குளிர்காற்று உறங்குபவர்கள்மேல் படாது பாதுகாத்துக்கொள்ளுதல் அவசியமெனினும் நல்ல காற்று அறைக்குள்புக ஏற்பாடு செய்யவேண்டியது அதனினும் மிக அவசியம். மிகுந்த குளிர்காலங்களிலும் கூட கெட்ட காற்று வெளிச்செல்ல ஒரு காற்றுத்துவாரம் நல்ல காற்று உள்ளேவர ஒரு ஜன்னலுமாவது திறந்து வைக்கப்படவேண்டும்.

வேனிற்காலத்தில் பாதுகாப்பிற்குப் பங்கம் வாராதபடி எத்தனைக் கதவு ஜன்னல்களைத் திறந்துவைக்க முடியுமோ அத்தனைக் கதவு ஜன்னல்களையும் திறந்துவைக்க வேண்டும். சில இந்தியர்கள் வேனிற்காலத்தில் வீட்டின் மாடியின்மேலும் திண்ணைகளிலும் முற்றங்களிலும் படுத்துறங்குவது வழக்கம். அவர்கள்மேல் பனியாவது மழையாவது படாமலிருக்கும் வரையும் அது மிகவும் நல்லதே.

தனவான்கள் வீடுகளில் நல்ல காற்றோட்டமிருக்க அறைகள் உயரமாகவும் அவைகளில் ஜன்னல்களும் கதவுகளும் ஏராளமானவையுமாக இல்லாமலிருக்க ஒரு காரணமுமில்லை. விசாலமான திண்ணைகள் இருக்கவேண்டும். அப்படியிருந்தால் கதவு ஜன்னல்களைத் திறந்து வைக்கும்போது காற்று நன்றாக வரும். அதிக வெளிச்சமும் உஷ்ணமும் அதேசமயத்தில் அறைக்குள் நுழையா. ஏழைகள் வீட்டிலோ என்றால் காற்றோட்டத்

திற்கு வேண்டிய சௌகரியம் எல்லாம் செய்வது மிகவும் கஷ்டமே. ஆயினும் ஜாக்கிரதையாயிருந்தால் அதிக பயனடையலாம்.

ஒரு அறையில் ஒரே கதவும் ஜன்னலும் தான் இருக்க இயலுமானால் அவைகளை அறைக்குத் தக்கபடி எவ்வளவு பெரியனவாக வைக்க முடியுமோ அவ்வளவு பெரியனவாக வைப்பதுடன் ஜன்னலை கூரைக்கு அருகாமையில் வைக்கவேண்டும். ஏனென்றால் கெட்ட ஆகாயம் அதன் வழியாக வெளியேபோகவும் நல்ல ஆகாயம் கதவின் வழியாக உள்ளே வரவும் கூடுமல்லவா? கெட்ட ஆகாயம் புகைமுதலியன எல்லாம் வெளியே போவதற்கு ஒன்றுமில்லாததைவிட கூரையில் ஒரு துவாரமாவது இருத்தல் மிக நலம். மிக எளியவனுடைய குடிசையிலும்கூட இந்தத் துவாரம் இருத்தல் மிக அவசியம். அந்தத் துவாரமானது குறைந்தது ஒருசதுர அடி அளவாவது இருக்கவேண்டும். அதை மிக உஷ்ணமான நேரங்களிலும் மழைபெய்யும்போதும் மூடிவிடலாம்.

இந்தியாவில் மிக உஷ்ணமான நேரங்களில் சூரியவெப்பத்தைத் தடுப்பதற்காக கதவுகளை மூடிக்கொள்ள வேண்டிவருகிறது. அக்காலங்களில் காற்று வீட்டின் எல்லாப் பக்கங்களிலும் செல்லும்படி காலை மாலை வேளைகளில் எல்லா ஜன்னல் கதவுகளையும் திறந்துவைக்க வேண்டும். மத்தியான நேரத்திலும்கூட சூரியவெப்பம் வீட்டின் ஒரு பக்கத்தில்தான் அதிகமாய் அடிக்கும். ஆதலால் மற்றப்பக்கத்திலுள்ள ஜன்னல் கதவுகளைத் திறந்து அறைகளிற் காற்றோட்டத்தை உண்டுபண்ணிக்கொள்ளலாம். இது நாமே கவனிக்கவேண்டிய வேலைகளிலொன்று. சூரியன் நிலையையும் காற்றடிக்கும் திசையையும் கண்டுபிடித்து அதற்குத் தக்கவாறு கதவு ஜன்னல்களைத் திறந்தலும் மூடலும் நமது வேலையாட்களுக்குத் தெரியாது.

ஆகாயம் கெட்டுப்போவதற்குக் காரணம் ஜீவஜெந்துக்கள் சுவாசிப்பதும் நெருப்பு விளக்குகள் எரிவதும் மட்டுமல்ல. எந்தவிதமான அசுத்தமும் காற்றைக் கெடுத்துவிடும் ‘சுத்தம்’ என்பதைப்பற்றி எழுதுங்கால் இதைப்பற்றி விரிக்கப்படும்.

(இன்னும் வரும்.)

M. V. Menakshi Sundara Mudaliar B. A.

# நட்பு.

செயற்கரிய யாவுள நட்பினதுபோல்
வினைக்கரிய யாவுள காப்பு.

என்று திருவள்ளுவநாயனார் சொல்லியபடி நட்பைப்போலத் தேடுவதற்கு அரியதும் ஆபத்துக்கு உதவத்தக்கதும் வேறு ஏதாவது ஒன்றுண்டா? அத்தன்மையுடைய நட்பானது எளிதிற்கிடைத்தலரிது. ‘முகநகநட்பது நட்பன்று’ என்றதின் கருத்திற்கிசைய ஒருவரையொருவர் காணும்பொழுது முகமலர்ச்சிகாட்டி இனிய பேசுதலும் மகிழ்ந்திருத்தல் முதலிய வெளிச்சிநேகம் பாராட்டுதலும் மாத்திரமே உண்மையான சிநேகமாகாது.

“சமயம் வரினிடித்துரைப்பார் தக்கவழிச்செலச் செய்வா
ரிமையவர்த முலகுறவு மிருளுலகம் பகையுமா
யமையவறி வுறுத்துவா ரந்தோ நூல் கற்றுணர்ந்த
சமையுடையார் நட்பெவர்க்குக் காண்கிடைக்கு மரிதரிது.”

(குசேலோபாக்கியானம்.)

என்றபடி தமக்குள் ஒருவர், தீமைவிளைக்கத்தக்க கெட்டவழியிற் செல்வாராயின் அப்பொழுது அவரை அவற்றிற் செல்லவொட்டாமற்றடுத்தும், நன்மை விளைக்கத்தக்க நல்வழியிற் செல்லாராயின் அவரை யவற்றிற் செலுத்தியும், தமக்குள் ஒருவருக்கு ஏதேனுந்தீங்கு நேர்ந்தவிடத்து, அதைத்தனக்கு நேர்ந்ததாகப் பாவித்து, விட்டு நீங்காமற் கூடவே யிருந்து அனுபவித்தும் இங்ஙனம் ஒற்றுமை யுடைமையே சிநேக தருமமாகும். இக்குணங்களையுடைய அறிவுடையோரோடு செய்தநட்பு சுக்கிலபட்சத்துச் சந்திரன்போல முதலிற் சிறிதாயிருந்து வரவர வளரும்; அறிவிலாரோடு செய்த நட்போ, கிருஷ்ணபட்சத்துச் சந்திரன்போல வரவரக் குறையும்.

**நட்பாராய்ச்சி.**

ஆகையால் ஒருவன் வாழ்நாளில் உண்டாகக்கூடிய துன்பங்களை யணுகவொட்டாமற் றடுக்கவும், துக்கம்நேர்ந்தவிடத்து மனமுருகச்செய்யாமல் பொறுக்கச்செய்யவும் களிப்புடன் காலங்கழிக்கவும் அவசியமாய்ச் செய்யவேண்டுங் காரியம் நற்குணம் பொருந்திய நண்பனைத்தேர்ந்தெடுத்து பிரிவன்றி யொத்து வாழ்தலேயாம். ஒருவனுடைய குணமுதலியவற்றைப் பாராமல் ஒருவனோடு நட்புக்கொள்ளலாகாது. பழிபாவங்களுக்கு அஞ்சுபவனெவனோ, அவனோடன்றி பிறரோடு சிநேகித்தல் கூடாது. நமக்கிதஞ் சொல்லிக்கண்டிப்பவர் மட்டுமே சிறந்தநண்பராவர். மாசற்ற மனதுடையவரோடு மட்டுமே நட்புச் செய்யவேண்டும். அப்படிப்பட்ட நட்பிற்கு எப்பொழுதுங் கூடவே யிருந்து பழகுதல் அத்தனை அவசியமன்று; ‘நெஞ்சத்தகநகநட்பதுநட்பு’ என்றபடி நெஞ்சார நட்பதே நட்பாகும். நட்டபின்பு விடுவது தீதாதலால் பார்த்தறிந்து நட்புச் செய்துகொள்ளவேண்டும். நம்மைக்கடித்துக் கொள்ளுகிற பாம்பினோடும் பழகினபின்பு விடுவது தீதாகும். “நெல்லுக்குமியுண்டு, நீர்க்கு நுரையுண்டு, புல்லிதழ் பூவிற்குமுண்டு.” என்றவண்ணம் இவ்வுலகிற் குற்றஞ் சிறிதேனுமில்லாதது ஒன்றுமில்லையாதலால் விரும்பிக்கொண்ட நட்பினை விட்டுவிடுவது நன்றன்று. ஆறு, குளமுதலியவைக் கரையையுடைத்துக் கொண்டுபோனாலும் ஜலத்தின்பொருட்டுப் பயிரிடுவோர் அவற்றை யடைப்பதுபோலவே நமது நண்பர் நமக்கு வெறுப்பானவற்றைச் செய்தாலும் பொறுத்தலேவேண்டும். ஒருவர் பொறை யிருவர் நட்பாதலால் நட்டார் இருவருள் ஒருவர் பொறுத்தால்மட்டுமே அந்நட்பு நிலைபெறும். நுண்ணுணர்வு கொண்டவர்களோடு கொண்டநட்பு விண்ணுலகத்திருப்பதுபோல பேரின்பத்தைத்தரும். அறிவில்லாதவர்களுடன் கொண்டநட்பு நரக வேதனையைத் தரும்.

ஆகையால் ‘சேரிடமறிந்துசேர்’ என்று ஔவை சொல்லியபடி இணக்கமறிந்து இணங்கல்வேண்டும். “உற்றாரெல்லாம் உறவினரல்லர்’ என்றவண்ணம் சிலவிடத்தில் சுற்றத்தாரே பகைவர்களாதலு முண்டாதலால் ஆழ்ந்த நட்பினுக்கு உறவே காரணமன்று. அப்படிக்கன்றி உறவினரே நல்ல நண்புடையவர்களா யிருந்தால் அது பொன்மலர் நாற்றமுடையது போலாகும். தெய்வபக்தி யுடையவர்களுடைய நட்பு என்றும் மாறாது மேன்மேலும் வளர்ந்தோங்கும். முதலில் நல்லாருடன் நட்புக்கொண்டால், பின்பு தீயாருடைய நட்பு சிறிதும் மனதிற்கொவ்வாது. அமுதமுண்டவர்க்கு வேம்பு இனித்திருக்குமா. சிற்பியின் கைத்திறத்தினால் முப்பத்திரண்டு இலக்கணமும் பொருந்தி நம்மோடு எதிரில் வந்து வார்த்தை சொல்லுகிறது போலிருக்கிற மரப்பாவையைப் பார்த்த கண்ணுக்கு, கம்பத்தின்மேலேறி உட்கார்ந்திருப்பதுபோல சித்திரத்திலெழுதிய குரங்குச் சிறந்ததாகத் தோன்றுமா. இவ்வாறே, நமக்கு ஏற்றவர்களோடு நட்புண்டானால் மாத்திரமே மனதுக்கு இனிமையாயிருக்கும். நட்பைப்பற்றி ஸிஸரோ என்பவர் சொல்லியதென்னவெனில், ஜனங்கள், தங்களுக்கு ஐசுவரியம் செல்வாக்கு முதலியன மிகுந்திருக்குங்காலத்தில், குதிரைகளையும் உயர்ந்த வஸ்திரங்களையும், சாமான்களையும் வாங்குவதில் மிக்க ஊக்கங்கொண்டவர்களா யிருக்கிறார்களே யொழிய, இவைகளை யெல்லாம்விட வாழ்நாளுக்கு மிக்க அவசியமானதும் விலையுயர்ந்ததுமான நல்ல சிநேகிதனைத் தேடியடைய அவ்வளவு முயற்சி யெடுத்துக் கொள்ளுகிறதில்லை,

ஒருவனைத் தன்னிடத்தில் எத்தனை குதிரைகளும், நாய்களும் இருக்கின்றனவென்று கேட்டால், உடனே அவைகளை அவன் கணக்கிட்டுச் சொல்லுவான். ஆனால் எத்தனை சிநேகர்களிருக்கிறார்களென்று வினவினால் அவனாற் சொல்லமுடியாது. நம்மி

டத்தில் பழகுகிறவர்களோடு எல்லாம் நாம் மரியாதையாய் இருக்கவேண்டியதுதான். ஆனால் அவர்களை யெல்லாம் உண்மையான நேசர்களாய்ப்பாவிப்பது சரியன்று. தங்கள் வீட்டுக்குச் சமீபத்தில் வசிப்பதினாலேயும் தன்னோடு ஒரே உத்தியோகத்திலிருப்பதினாலேயும் அவர்களையுண்மையான சிநேகிதர்களாகக் கொள்வதைக்காட்டிலும் பிழைவேறொன்றுமில்லை. பெரும்பாலும் நல்லோர்க்கு நல்லோரும், தீயோர்க்குத் தீயோரும் சிநேகமாவது இயற்கை. இப்படிக்கன்றி சகவாசதோஷத்தினால் வேறுதலுமுண்டு. சுட்டமண்ணும் பச்சைமண்ணும் ஒன்றுக்கொன்று ஒட்டாததுபோல நல்லோருக்குந் தீயோருக்கும் ஆழ்ந்தநட்பு என்று முண்டாகாது. அப்படிக்கன்றி வேறு யாது காரணத்தினாலே யாவது ஒருவேளைத் தெரியாமலுண்டானால் "நொய்யரிசி கொதி பொறுது" என்றதுபோல் அவ்வாறு கொண்ட நட்பு நிலைபெற்றிருது. தீயவர்களோடு இணங்கியிருத்தலே நீதாகும். ஏனெனில் பின்பு இது பெருங் கேட்டை விளைவிக்கும். இதற்கு ஒரு திருஷ்டாந்தம் :—

கதை.

கிரேக்கு தேசத்தின் ராஜதானியாகிய ஆதேன்ஸ் என்னும் நகரத்தில் டைமான் என்னும் பிரபு ஒருவர் இருந்தார். கொடையில் அவரைக் கர்ணனுக்கு நிகராகச் சொலலலாம். யார் எதைக் கேட்டாலுங் கொடுப்பதே அவருக்கு ஆனந்தம். எந்த நாளிலும் எந்த வேளையிலும் அவருடைய மாளிகையில் பாட்டுங் கூத்தும் விருந்தும் வேடிக்கையுமாய் நித்திய கல்லியாணமாய் இருக்கும். எவரேனும் அவரிடத்திலுள்ள பொருளுக்கு ஆசைப்பட்டு, அறியாததுபோல் அதை யென்னவென்று கேட்டால் சிறிதேனுந் தடை சொல்லாமல் அதைக் கொடுத்துவிடுவது அவருக்கு பிறவிக்குணம். அந்நகரத்தில் யாரேனு மரிய பண்டங்களை விற்கவேண்டி அவரிடஞ் சென்று அவற்றைக் காட்டினால், உடனே அவர் எதிர்பேசாமல் சொன்னவிலை கொடுத்து வாங்கிக்கொள்ளுவார். அவரண்டையிருந்த கணக்குப்பிள்ளைகளும் நண்பர்களும் ஏற்றசமயங் கண்டபோதெல்லாம் அவரையிந்திரனென்றுங் குபேரனென்றும் புகழ்ந்துபேசிப் பொருளைப் பறிப்பதிலேயே நாட்டமுடையவர்களாயிருந்து, அவர் செல்வங் கரைந்தவுடன் அவரைக் கைவிட்டுக் காற்றாய்ப் பறந்துபோனார்கள். டைமான் பெருங் கொடைவள்ளலாதலால், அவர் தமக்குள்ளவற்றையெல்லாங் கொடுத்தது மன்றி, அதற்காகக் கடனும் படவேண்டியதாயிற்று. ஆகையால், அவர் தாம் செல்வ முடையவரா யிருந்தகாலத்தில் தம்மோடு அதிக நேசமாயிருந்த லூஷியஸ், லூதலஸ், வெம்பிரோனிஸ் என்னும் பிரபுக்களிடம் தம் வேலையாட்களையனுப்பி ஒவ்வொருவரிடமிருந்தும் ஐம்பது டாலெண்டு கடனாக வாங்கிக் கொண்டு வரும்படி அனுப்பினார். அவருடைய வேலையாட்கள் அப்படியே லூஷியஸ்ஸைக் கண்டுப் பணங் கேட்டபொழுது அவன் தேடிப்பார்த்துந் தான் அகப்படவில்லையென்று, போய்ச்சொல்லும்படி சொன்னான். இரண்டாவனாகிய லூகுலஸ் என்பவன், தன்னிடமிருந்த பணத்தைக் கொடுத்து அதற்கு முதல்நாள்தான் ஏதோ வொன்றை விலைக்குக் கொண்டதாகவும், அதனால் தன் தோழனுக்குச் சமயத்தில் உதவி செய்யக் கூடாமற் போயிற்றென்றுஞ் சொன்னான். மூன்றாவனாகிய வெம்பிரோனிஸ் என்பவன் தன்னை மதியாமல் கடைசியில் தன்னிடம் பணத்துக்கு வரும்படி அனுப்பினாராகையால் அது தன் கௌரவத்திற்குக் குறைவென்றும், ஆதலினாற் பணங் கிடையாதென்று போய்ச் சொல்லிவிடலா மென்றுஞ் சொல்லியனுப்பினான். அன்றுமுதல் டைமானுக்கு மனிதர்மேல் வைத்திருந்த விருப்பமெல்லாம் வெறுப்பாயிற்று. அதன் பின்பு டைமானுக்கு மீண்டும் மிகப் பொருள் கிடைத்ததென்றாலும் அவர் அதன்மேல் ஆசையை முற்றுமொழித்து அதைப் பிறருக்குக் கொடுக்கவும் விரும்பாமல் ஏகாந்தமாய் வாழ்ந்து தன் காலத்தைக் கழித்தார்.

நடக்கை.

மேற்சொல்லிய டைமான் பிரபுவுக்கிருந்த நண்பரைப்போலில்லாமல் சுக துக்கங்களுக் குடன்பட்ட நண்பர்களே சிறந்த நண்பராவர். சபையில் ஒருவனுக்கு ஆடையவிழ்ந்துவிழும்போது எவ்வாறு அவனது கைகள் விரைந்துசென்று உதவுகின்றனவோ அவ்விதமே ஆபத்துவந்தவிடத்து உதவவேண்டும்.

**தாமன், பிதியஸ் கதை.** இதற்குத் திருஷ்டாந்தமாகஸைரகியூஸ் என்னும் பட்டணத்தில் தியோனிஸியஸ் என்னுங் கொடுங்கோல் மன்னனது ஆளுகைக்குட்பட்ட இரண்டு அத்தியந்த சிநேகிதர்களாகிய தாமன், பிதியஸ் என்னும் இருவரில் தாமன் ஏதோ ஒரு குற்றத்திற்காகக் கொலைசெய்யப்படும்படி அக்கொடிய அரசனாற் கட்டளை யிடப்பட்டதும் அப்பொழுது தாமன் தன் குடும்பத்தாரைப் பார்த்துவிட்டு வருவதற்கு உத்திரவளிக்கும்படி அவ்வரசனைவேண்ட அதற்கு அவன் வேறு யாரையாவது பிணைபடுத்தினால் மட்டுமேதான் அவனைப் போகவிடுவதாகச் சொன்னதும், அதற்குத் தாமனது உயிர்த் தோழனாகிய பிதியஸ் என்பவன் அவ்வரசனுக்கு முன்வந்து தன் நேசனுக்குப் பிணைபட்டு அவனை விடுவித்ததும், பிறகு கொலைசெய்வதற்குக் குறிப்பிட்ட சமயத்திற்குள் தாமன் திரும்பி வராததினால் பிதியஸ்ஸைக் கொலைசெய்யு மிடத்திற்குக் கொண்டு போய் அவனைத் தூக்கிற் போடப்போகிற தருணத்தில் தாமன் வந்துவிட்டதும், பிறகு அக்கொடியோனும் அவர்களது நட்பின் வலிமையைப்பார்த்து மனமுருகி அவர்களிருவரையும் விடுவித்துவிட்டதும் யாவருக்குந் தெரிந்த விஷயமே.

நமக்கு வேண்டியவ னென்பதும், வேண்டாதவ னென்பது மாபத்துக்காலத்திலே தான் தெரியும். நாம் தீயனவற்றைச் செய்யப் புகுகையில் நமது நற்றோழர் சிறிதும் ஆற்றப்பொறாது நம்மைக் கடிந்துக்கொள்ளுவார்; அவர் அப்படிக் கடிந்துக்கொள்ளுவதும் "இனியவ ரென்சொலினு மின்சொல்லே, யின்னார்க்கனியு மொழியுங் கடுவே" என்றபடி நமக்கு அது குற்றமாகத் தோற்றுது.

நாம் அடிக்கடி நம்முடைய நண்பர்கள் இருக்கு மிடஞ்சென்று அவர்களோடு சம்பாஷித்துவரவேண்டும். இல்லாவிடில், எப்படி ஒரு பாதையானது ஒருவரும் அதன் மேல் நடக்காவிடில் புற்பூண்டு முளைத்து சில நாட்களில் மறைந்து அது இருந்த விடந் தெரியாமற் போகின்றதோ அப்படியே நண்பர்கள் அடிக்கடி சந்திக்காவிடில் அவர்கள் நட்பாகிய பாதையானது மறதியென்னும் புல்லினால் மூடப்பட்டுக் கடைசியில் அந்த நட்பு இருந்தவிடந்தெரியாமல் மறைந்துபோய்விடும்.

மேலும் நாம் பேசும் விஷயமானது குதிரைப் பந்தயம், குத்துச்சண்டை, விளையாட்டு இன்னும் இதைப்போல்வனவற்றையல்லாமல் நம்மோடு பழகுகிறவர்களுடைய பொறுமையையும், விடாமுயற்சியையும் உதாரகுணத்தையும் மற்றுமுள்ள குணாதிசயங்களைப்பற்றியும் சம்பாஷித்து அதினால் சந்தோஷ மடைவதே சிறந்தது என்று ஒரு ஆங்கிலேய வித்துவான் கூறியிருக்கிறார்.

**நன்மைகள்.** நண்பர்களில்லாத ஒருவனுக்கு இவ்வுலகம் ஒருகாடுபோலவும், ஜனங்கள் காட்டிலுள்ள பிராணிகளைப்போலவும் காணப்படும். ஒரு நல்ல சிநேகிதனால் பிரயோசன மென்னவென்றால் தன்னுடைய கஷ்டங்களையும் சுகங்களையு மவனிடஞ் சொல்லித் திருப்தி யடைவதற்கே. தேகத்தில் எந்தவிடத்தில் ஒரு புண் உண்டானாலும் அதை மருந்துகொடுத்து ஆற்றிவிடலாம். ஆனால், மனதில் உண்டான புண்ணுக்கு ஒரு நல்ல சிநேகிதனை விட சரியான மருந்து வேறொன்றுமில்லை. தன் நேசனோடு தன் சுக துக்கங்களைச் சொல்லிக்கொள்ளுவதில் இரண்டுவித லாபமுண்டு. அவையாவையெனின், தன் சந்தோஷத்தைச் சொல்வதினால் அது விருத்தியடைகிறது. தன் துக்கங்களைச் சொல்வதினால் அது கொஞ்சங் குறைகிறது.

ஒருவனுக்குத் தன் மனதில் ஏதாவதொரு விஷயத்தைப்பற்றிப் பல சந்தேகமிருந்தால் அதைப்பற்றித் தான் ஒருவனுடன் சம்பாஷிப்பதினால் தன் அபிப்பிராயங்களையெல்லாம் விவரமாய் எடுத்துச்சொல்லித் தன்சந்தேகங்களையெல்லாந் தீர்த்துக்கொண்டு ஒருநாள்முழுதுந் தானே யோசனை செய்தாலும் அறியக்கூடாத பல விஷயங்களை ஒரு மணிநேரஞ் செய்யுஞ் சம்பாஷணையினால் தெரிந்துகொள்ளுகிறான். ஆனால் இப்படித் தெரிந்துகொள்வதற்காக நாம் சம்பாஷிக்க விரும்புகிறவர்கள் நமக்குப் போதிக்குந் திறமையில் வல்லவராய் இருக்கவேண்டுமென்பது அவசியமேயில்லை. ஒரு கல்லில் ஒரு கத்தியை (அக்கல்லுக்கு ஒரு பிரயாசமுமில்லாமல்) சாணை பிடிப்பதுபோல தன் எண்

ணங்களை யவனிடத்தில் வெளிப்படுத்துவதினால் அவனுடைய முயற்சியில்லாமலே தன் மனதைத் தெளிவாகச் செய்துகொள்ளுகிறான். ஆனால் தானே தன் மனதுக்குத் தோன்றினபடி நடந்துகொள்ளுவதைவிட ஒரு உண்மையான சிநேகிதனது யோசனையைக் கேட்டு அதன்படி நடத்தல் சிறந்தது. ஏனெனில் ஒரு மனிதனை ஸ்தோத்திரஞ் செய்வதில் அவன் மனதைவிட வல்லது யாதொன்று மில்லையாதலின் அப்படிப்பட்ட கெட்ட நண்பனது யோசனையாகிய அவன் சொந்த யோசனையைவிட ஒரு நல்ல நண்பனது யோசனையைக் கேட்டு நடத்தல் நன்று. அப்படி யோசனை செய்வதிலும், தன்னுடைய நடவடிக்கை முதலிய குணங்களை நன்றாக அறிந்துள்ள நேசனிடத்தில்தான் எதைப்பற்றியாவது யோசனை செய்யவேண்டும். அப்படியல்லாமல், ஒரு சமயத்தில் ஒருவன் புத்திமதியையும் மற்றொருசமயத்தில் வேறொருவன் புத்திமதியையும் ஒருவன் கேட்பானாகில், எப்படி வியாதியினால் வருந்துகிற ஒருவன் தனது குணங்களை நன்றாக அறிந்து வழக்கமாய் மருந்துகொடுத்துக்கொண்டிருக்கிற ஒரு வைத்தியனை விட்டுவிட்டு வேறொரு வைத்தியனிடம் மருந்துவாங்கிசாப்பிட, அம்மருந்து அச்சமயத்தில் அவ்வியாதியைத் தீர்த்தபோதிலும், பிறகு அம்மருந்து தன் உடம்புக்கு வேறொரு பெரிய கெடுதியை யுண்டுபண்ணிதான் அதினால் பெரிய துக்கத்தை யனுபவிக்கிறானோ, அப்படியே கடைசியில் அவர்கள் கெட்ட புத்திமதியினால் தனக்குப் பெருந் தீங்கை விளைவித்துக் கொண்டு அதினால் நாசமடைவான். ஒரு அன்புள்ள சிநேகனுடைய முக்கியப் பிரயோசன மென்னவெனின் தன்னாலாகாத காரியங்களையெல்லாந் தன் நண்பனது உதவியினால் முடித்துக்கொள்ளுவதுதான். ஆகையால் அப்படிப்பட்ட சிறந்த குணத்தை யுடைய நண்பர்களை யடையும்படியான புண்ணியத்தைச் செய்து அவர்களையு மடைந்தோமாகில் அவர்கள் தங்கள் வாழ்நாளில் மாத்திரமேயல்ல வேறுலகஞ் சென்றபோதிலும் நம்மைவிட்டுப் பிரிந்திராரென்பது நிச்சயம்.

E. சுப்பிரமணியம் பி. ஏ.

---

## சமாசாரக் குறிப்புகள்.

நீலகிரிமலையில் குன்னூரில் பெண்களுக்காக ஒரு ஐஸ்கூல் செண்ட் ஜோசப் மிஷனரிகளால் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறதாம்.

---

மாதர்கள் இப்பத்திரிகைக்கு அடிக்கடி விகெதைகளையும், நிருபங்களையும் எழுதி வருவார்களென நம்புகிறோம்.

---

பத்திராதிபர் இப்பத்திரிகை தாமதமாய் வெளிவந்ததைப்பற்றி மிக வருந்துவது யாவருக்கும் தெரியும். நமது கையொப்பநேயர்கள் தங்கள் சந்தாவையும் கூடிய சீக்கிரத்தில் அனுப்புவார்களென்று நம்புகிறோம்.

---

நமது பார்வைக்குவந்த புஸ்தகங்கள்:—மாமிகொலுவிருக்கை, மதிகெட்ட மனைவி, Hindu Fasts and Feasts, சாவித்திரி, எட்வர்ட் சக்ரவர்த்தி, Indian Progress; இவைகளைப்பற்றி நமது அபிப்பிராயம் அடுத்த பத்திரிகையில் வெளிவரும்.

---

நமது பத்திரிகைக்கு அநேக இடையூர்கள் வந்தமையால் தாமதித்தே பத்திரிகையைப் பிரசுரிக்கவேண்டிவந்தது. இத்தடவை பிப்ரவரி மார்ச்சு மாதத்திய பத்திரிகைகள் ஒன்றா சேர்க்கப்பட்டுளது. ஏப்பிரல், மேமாதத்திய பத்திரிகையும் இவ்வித மிருக்கும். ஆயினும், இனி இவ்விதமிராது பத்திரிகையும் தாமத மில்லாமல் அந்தந்த மாதத்திலேயே பிரசுரிக்கப்படும்.

---

பிரைமரி உபாத்தியாயர் சங்கத்தின் முதல் வருஷோற்சவம் வெகு விமரிசையாக மார்ச்சுமீ 28உ நடந்தது. அப்பொழுது மிஸ்டர் எஸ். மார்ஸ்டன் சபைத்தலைவராக விருந்தார். அக்காலத்தில் கீழ்தரப்படிப்பைப்பற்றி மிஸ்ஸஸ் யன். எ. கோர்ட்ரைட் என்றமாது உபந்நியாசித்தார். இது மிகவும் நன்றாகவிருந்தது. பின்பு சபாநாயகருக்கும், மிஸ்ஸஸ் கோர்ட்ரைட் என்ற மாதுக்கும் வந்தன மளித்தபின் சபை கலைந்தது. இப்பிரசங்கத்தை மொழிபெயர்த்து சீக்கிரத்தில் நமது பத்திரிகையில் பிரசுரிப்போம்.

Printed at the Rip on Press Madras & Published by C. S. Ramasawmy Iyer, Triplicane, Madras.